**தலைப்பு 289 - ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
  - நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி 1,098,889,538 ஆக இருந்த போதும் அது மீளாய்வாண்டிற்காக முன்கொண்டு வரும் போது ரூபா 1,102,130,963 என காண்பிக்கப்பட்டிருந்தது. ஆதலால் மீளாய்வாண்டின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 3,241,425 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இத்தவறினை சீராக்கம் செய்வதாக. | முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளை சரியாக மீளாய்வாண்டிற்காக முன்கொண்டு வரப்பட வேண்டும். |

**(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவு ரூபா 49,679,014 தொகையும் வைப்பு பெறுவனவு ரூபா 1,145,182 தொகையும் முற்பண பெறுவனவுகள் ரூபா 41,938,711 தொகையும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய செலவின தலைப்பிற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 468,061,621 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதாக எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயரிக்கப்படும் என்பதாக | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய செலவினங்களிற்காக 8 சந்தர்ப்பங்களின் போது ஏற்படுத்திக் கொண்ட கடப்பாடுகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 111,308 ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இப்பொறுப்புக்களை இனங்கண்டிருக்கவில்லை என்பதாக | ஒவ்வொரு படிவத்திலும் வெளிப்படுத்த வேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 2.2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | | |
| | ரூபா | | | |
| (அ) 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம் | | | | |
| 15(1) ஆம் பிரிவு | 602,900,000 | ஏற்றுமதி மேம்படுத்தல் உதவி அறிவிக்கப்பட்ட விவசாயப் பயிர்கள் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்ற மற்றும் தயார் செய்யப்படும் ஆட்களுக்கு சலுகைகள் மற்றும் நிதிசார் அல்லது அல்லாவிடில் வேறு வகையான உதவிகள் வழங்கும் முன்மொழிவுகள் முறைமைக்காக அமைச்சரினால் கட்டளை வழங்கப்பட்டதன் | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டதாக் | சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பின்னரே வழங்கப்பட வேண்டிய போதும் அவ்வாறான கட்டளையொன்று தயாரிக்கப்படாமல் ஏற்றுமதி மேம்பாட்டு உதவிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| XIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | 44,100 | சேவை நிலையத்திலிருந்து வெளியேறி கடமைக்காக செலவிடப்படும் 12 மணித்தியாலங்களுக்கு குறையாத காலப்பகுதிக்காக முழு இணைந்த படியும் 6 மணித்தியாலயத்திற்கு குறையாத காலப்பகுதிக்காக இணைந்த படியின் அரைப்பங்கும் செலுத்த வேண்டியதுடன் 6 மணித்தியாலங்களுக்கு குறைந்த கொடுப்பனவு செய்ய முடியாது எனினும் அந்த ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாமல் இணைந்த படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த இணைந்த படிகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (இ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016(1) ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | 12,996,000 | செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது பணிப்பாளர் அல்லது அதற்குச் சமமான மட்ட உத்தியோகத்தர் களுக்காக பெற்றுக் கொள்ளப்படும் வாகனமொன்றின் ஆகக்கூடிய மாதாந்த | குழாமிற்காக பெற்றுக் கொண்ட வாகனங்கள் பின்னர் பணிப்பாளர்களுக்கு இணைக்கப்பட்டமையால் இந்நிலைமை ஏற்பட்டதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் |

குத்தகை (பெறுமதி சேர் வரியில்லாமல்) ரூபா 135,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் உட்பட 08 பணிப்பாளர்களுக்காக பெற்றுக்கொண்டு இணைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்காக மாதமொன்றுக்கு ரூபா 163,500 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் அது வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதாக | கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்கு சொந்தமாக 90 அரச வீடுகள் காணப்பட்டதுடன் 07 வீடுகள் சிதைவடைந்த நிலைமையில் காணப்பட்டன. அவ்வாறே உத்தியோகத்தர்கள் குடியிருக்கும் 32 வீடுகள் காணப்பட்டதுடன் அந்த வீடுகள் மழை காலங்களில் நீர் கசிவிற்கு உட்படல், மலசலகூடம் பழுதடைந்து காணப்படல், மின்சாரம் இல்லாமை, நீர் குழாய் முறைமையில் சிக்கல்கள் காணப்படல் போன்ற குறைபாடுகளுடன் காணப்பட்டமையால் திருத்த வேண்டிய நிலைமையில் காணப்பட்டன. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு அத்தியவசிய செயற் திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டதால் இந்த திருத்த வேலைகளை செய்ய முடியாமல் இருந்ததாக | அரசின் வீடுகளை சிதைவடைவதற்கு இடமளிக்காமல் பராமரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரூபா 3,000,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 3 வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டன. | இவ்வாகங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உள்ளதாக | திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லாவிட்டால் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளில் இடம்பெற்றிருந்த 4 நட்ட சம்பவங்களுக்குரிய ரூபா 3,926,808 ஆன நட்டங்களை மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 2,348,453 இற்குரிய 2 சம்பவங்கள் 5 ஆண்டுகளுக்கு முன்னிருந்து காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | ரூபா 2,250,000 ஆன நட்டங்களை பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுவதற்கு உள்ளதுடன் எஞ்சிய நட்டங்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்குரிய கஸ்நாவையில் அமைந்துள்ள நாற்று மேடை 2018 திசெம்பர் மாதம் கிடைத்திருந்த ரொக்பொஸ்பேட் மற்றும் டொலமைட் உட்பட 05 வகைக்குரிய 2873 கிலோகிராம் இரசாயன பசளை 2021 திசெம்பர் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் 3 வகைக்குரிய 853 கிலோ கிராம் காலாவதியாக இருந்தது. | பண்ணைத் தொழிலாளர்கள் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையால் 2018 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட இரசாயன பசளை அனைத்தையும் வெளிக்கள்த்தில் ஈடுபடுத்த முடியாமல் இருந்ததாக | தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பாக ஆர்வத்தை காண்பிக்கின்ற தரப்பினர் இனங் காணப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக நிறுவனத்திற்குரிய இலக்குகளை தயாரிக்கும் போது, பங்குபற்றுபவர் களுக்கான அணுகுமுறை தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி இலக்குகளைத் தயாரிக்கும் போது இது தொடர்பாக கூடுதலான கவனத்தை செலுத்துவதற்கு குறித்துக் கொண்டதாக | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிவூட்டப்பட வேண்டியதுடன் அதற்காக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சிரேஷ்ட மட்டத்தில் காணப்பட்ட 23 வெற்றிடங்களில் 16 இலங்கை விஞ்ஞான சேவைக்குரிய உதவிப் பணிப்பாளர் பதவிகளாக இருந்ததுடன் அது திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பாதகமாக தாக்கமளித்திருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | திணைக்களத்தின் தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்ட / விடயத்துடனான செயற்திட்ட உத்தியோகத்தர்கள் பதவியில் 16 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் வெளிக்கள நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்ல தடையாக இருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | திணைக்களத்தின் தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு: வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (இ) | 84 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பதவிகளுக்காக எந்தவொரு உத்தியோ கத்தரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | திணைக்களத்தின் தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு: வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஈ) | அங்கீகரிக்கப்படாத பதவியணியினருக்கு உட்படாத காவலாளி மற்றும் தொழிலாளர் தரத்திலான 114 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அப்பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லையென | திணைக்களத்தின் தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |